IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,

TENKASI.

**OS.No. 315/2021**

**நாள்– 19.11.2024**

**வா.சா.1** திரு.ஷாஜகான் – சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். 1ம் பிரதிவாதி செங்கோட்டையில் பிலால் என்னும் புரோட்டா கடை நடத்தி வந்தார் என்றால் சரிதான். அங்கு நான் சீட்டு பிரிக்க செல்வதால் தான் அவருடன் பழக்கம் ஏற்பட்டது என்றால் சரியல்ல, அங்கு புரோட்டா சாப்பிட செல்வேன். அவர் சுமார் 30 ஆண்டு காலம் எனக்கு நண்பர் என்றால் சரியல்ல. நான் அவரிடம் சீட்டு பிரிக்க செல்வதால் தான் அவருடன் பழக்கம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல, அவர் 23.07.2019, 18.02.2020 ஆகிய தேதிகளில் 2 லட்சரூபாய் போட்டிருந்தார் என்றால் நான் சீட்டு எதுவும் நடத்தவில்லை. சீட்டு நடத்துவது தான் என் தொழில் என்றால் சரியல்ல, விவசாயமும், ரியல் எஸ்டேட் செய்வதும் எனது தொழில். நான் விவசாயமும் ரியல் எஸ்டேட்தொழிலும் செய்யவில்லை என்றும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்வதற்குண்டான ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் உண்மையிலேயே ரியல் எஸ்டேட் தொழில் செய்யவில்லை என்றும், அதனால் தான் நான் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

1ம் பிரதிவாதி என்னிடம் 2 லட்ச ரூபாய் சீட்டு எடுத்ததற்கு ஆதாரமாக ரூபாய் 20 மதிப்புடைய வெற்று பத்திரத்திலும் மற்றும் வெற்று பேப்பரிலும் கையொப்பம் போட்டு கொடுத்தார் என்றால் சரியல்ல. 29.08.2021ல் நான் தாக்கல் செய்த Ex.A1 ஆவணம் தட்டச்சுசெய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அதில் 1வது மற்றும் 4வது பக்கத்தில் மட்டும் எனது கையொப்பமும், 1ம் பிரதிவாதியின் கையொப்பமும் உள்ளது என்றால் சரிதான். மற்ற 2, 3 பக்கங்களில் நானோ 1ம் பிரதிவாதியோ கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். நான் உண்மையிலேயே கிரைய உடன்படிக்கை

செய்திருந்தால் அனைத்து பக்கங்களிலும் கையெழுத்து வாங்கியிருப்பேன் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தை யார் தட்டச்சு செய்தார் என்ற விவரங்கள் எழுதப்படவில்லை என்றால் அதை 1ம் பிரதிவாதி தான் தயார் செய்து கொடுத்தார். 1ம் பிரதிவாதி மேற்படி ஆவணத்தை தயார் செய்து தரவில்லை என்றும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வா.சா.ஆ– 1 ஆவணத்தில் முதல் பக்கத்திலும் 4வது பக்கத்திலும் வெற்றுத்தாள்களாக இருந்த சமயம் கையெழுத்து போட்டுக்கொடுத்தார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 1 ஆவணத்தில் 2, 3 பக்கங்களில் தரப்பார்களின் கையொப்பம் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேற்படி ஆவணம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் சீட்டு சம்பந்தமாக எனது வீட்டிற்கு வந்து சமாதானம் பேசினார்கள் என்றால் சரியல்ல. அது தொடர்பான ஆவணங்கள் 1ம் பிரதிவாதியின் வசம் உண்டு என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 1 ஆவணம் சீட்டுக்காக வெற்றுப்பேப்பரில் கையொப்பம் போட்டு கொடுக்கப்பட்ட ஆவணம் என்றும், அந்த ஆவணத்தை பயன்படுத்தி மோசடியாக வா.சா.ஆ. 1 ஆவணத்தை தயார் செய்துள்ளேன் என்றும் எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. சீட்டுக்காக 16.02.2009 ஆம் தேதியில் 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய கிரைய ஆவணத்தை சீட்டு எடுத்ததற்கு பாதுகாப்பிற்காக (Security) என்னிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த கிரைய ஆவணத்தை மீண்டும் என்னிடமிருந்து 1ம் பிரதிவாதி பெற்றார் என்றால் சரியல்ல. அதை என்னிடம் இருந்து பெற்றுதான் சரவணன் மற்றும் ஹரிஹரன் ஆகியோருக்கு 1ம் பிரதிவாதி, 1ம் தபசில் சொத்தை கிரையம் கொடுத்தார் என்றால் சரியல்ல, அவர்களுக்கு கிரையம் கொடுக்கப்பட்டது வேறு சொத்து, 1ம் தபசில் சொத்து எனக்கு கிரையம் ஒப்பந்தம் செய்து கொடுக்கப்பட்டது.

பிராது தபசில் சொத்துக்களை பொறுத்து, 1ம் பிரதிவாதி 2, 3 பிரதிவாதிகளுக்கு கிரைய ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் அது மோசடியாக எழுதி வைக்கப்பட்டுள்ளது. கிரையம் எழுதி வைக்கப்பட்ட விவரம் எனக்கு 24.09.2021 ஆம் தேதி தெரியும். 2, 3 பிரதிவாதிகள், ஹரிஹரன் மற்றும் சரவணன் ஆகியோர்களுக்கு கிரையம் கொடுத்த இடத்திலிருந்து வந்த தொகையினை சீட்டு தொகைக்காக கொடுக்கும்போது, அதனை நான் ஏற்க மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.1 கிரைய உடன்படிக்கை ஆவணம் பதிவுசெய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். நான் உண்மையிலேயே கிரைய உடன்படிக்கை பிறப்பித்திருந்தால், அதிகப்படியான தொகை ரூ.20,00,000/– என்பதனாலும் மேற்படி ஆவணத்தை பதிவுசெய்திருப்பேன் என்றால் சரியல்ல. பதிவுசெய்யப்படாத கிரைய உடன்படிக்கை ஆவணத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. கிரைய உடன்படிக்கை சாட்சி மாரியப்பன் எனது நண்பர் என்றால் எங்கள் ஊர்க்காரர். அவர் 3 வருடங்களாக எனக்கு பழக்கம். கிரைய உடன்படிக்கை 2 வது சாட்சி முகம்மது எனது உறவினர் என்றால் சரியல்ல. 1ம் சாட்சி எனது நண்பர் என்றும், 2ம் சாட்சி எனது உறவினர் என்றும் வேண்டுமென்றே அவர்களை சாட்சியாக போட்டுள்ளேன் என்றால் சரியல்ல, 2 வது சாட்சியை 1ம் பிரதிவாதி தான் அழைத்து வந்தார். 2 வது சாட்சியை 1ம் பிரதிவாதி தான் அழைத்து வந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனது கட்சிக்கு சாதகமாக சாட்சியம் சொல்வதற்காக தான் கிரைய உடன்படிக்கையில் உள்ள 1, 2 சாட்சிகள் போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மோசடியான கிரைய உடன்படிக்கையின் அடிப்படையில் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>2, 3ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

பிராது தபசில் சொத்து 1ம் பிரதிவாதியின் சுயார்ஜிதசொத்து என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தனது மகன்களான 2, 3 பிரதிவாதிகளுக்கு 17.09.2021 ஆம் தேதி வா.சா.ஆ. 4, 5 ஆவணங்களின் அடிப்படையில் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் என்னுடன் போடப்பட்ட ஒப்பந்தத்திற்கு பிறகு மேற்படி வில்லங்கம் செய்துள்ளார். வா.சா.ஆ. 1 ஆவணம் பதிவுசெய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். எனவே அதுபற்றிய விவரம் வில்லங்க சான்று துலங்காது என்றால் சரிதான், ஆனால் வா.சா.ஆ.2, 3 ஆவணங்கள் என் வசம் இருக்கும் சமயம் 1ம் பிரதிவாதி அவரது மகன்களுக்கு கிரையம் கொடுத்ததாக வில்லங்கம் செய்துள்ளார்.

வா.சா.ஆ 4, 5 ஆவணங்கள் ஏற்படுத்தும் போது வா.சா.ஆ. 2, 3 ஆவணங்கள் 1ம் பிரதிவாதியின் வசம் தான் இருந்தது என்றால் சரியல்ல. 17.09.2021 ஆம் தேதியிலோ அல்லது அதற்கு முன்பாகவோ 1ம் பிரதிவாதி மற்றும் 2, 3 பிரதிவதிகளுக்கு ஏதேனும் அறிவிப்பு அனுப்பியுள்ளேனா என்றால் அறிவிப்பு அனுப்ப வேண்டிய அவசியம்

ஏற்படவில்லை. வா.சா.ஆ. 4, 5 ஆவணங்களில் உரிய மறு பயனுக்காக கிரையம் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது துலங்கும் என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 ஆவணம் வில்லங்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில் துலங்காததாலும், 1ம் பிரதிவாதிக்கு 2, 3 பிரதிவாதிகள் உரிய மறுபயன் செலுத்தி கிரையம் பெற்றுள்ள காரணத்தினாலும் வா.சா.ஆ- 4, 5 ஆவணத்தின் படி கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. எனவே 2, 3 பிரதிவாதிகள் நல்லெண்ண கிரையதாரர்கள் என்று சொன்னால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகளை பொறுத்து எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 4, 5 ஆவணங்கள் பதிவுசெய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

S MANOJKUMAR

Digitally signed by S MANOJKUMAR
Location: Additional District and Sessions Judge, Tenkasi.